11

உ

தமிழ்
இலக்கண இலகுபோதம்

ஐந்தாம் வகுப்புக்கு அமைந்தது

பண்டித. லி. ராமசாமி
எழுதியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - MAR 1933
MADRAS

சென்னை:
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பட்டது

1933

[விலை அணா 3

TB
P31 (5)
N33
190877

14

தமிழ்

இலக்கண இலகுபோதம்

ஐந்தாம் வகுப்புக்கு அமைந்தது

பண்டித. லி. ராமசாமி
எழுதியது

சென்னை "ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பட்டது.

பதிப்புரிமை] 1933 [விலை அணா 3

PRINTED AT THE
"ANANDA BODHINI" POWER PRESS,
NO. 6. LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
SOWCARPET, MADRAS.

முன்னுரை

7B
P31(50)
N33

இலக்கணங் கற்பதென்றால் மாணவர்கட்கு மாத்திரமல்ல - மற்றவர்கட்குங் கூட மலைப்பாகத் தோன்றுவது வழக்கம். இதற்குரிய காரணம் இலகுவான முறையில் இலக்கண நூல்கள் வெளி வராமையே யாகும். எல்லாத் துறையிலும் புதிய புதிய மாறுதல்கள் ஒப்புக்கொள்ளப்பட்டு நடை முறையில் வந்திருக்கும் இக்காலத்தில், தமிழிலக் கணப்பயிற்சி மட்டும் பெரும்பாலும் பழைய முறை யிலேயே போய்க்கொண்டிருப்பது ஆச்சரிய மாயிருக்கிறது. இலக்கண விதிகளைக் கண்ணை மூடிக் கொண்டு நெட்டுருப் போடுவதால் எத்தகைய பய னும் விளையாது என்னும் உண்மை அனுபவத்தில் உறுதியாகிவிட்டது. எனவே இலகுவான முறையில் இலக்கணங் கற்பிக்கும் நூல்கள் வெளிவருதல் இக்காலத்தில் பெரிதும் விரும்பப்படும் என்று நம்பு கின்றேன். இச் சிறிய இலக்கண நூல் **தமிழ் இலக் கண இலகுபோத** வரிசையில் முதலாவதாகும். இதில் மாணவர்களின் மனப்போக்கை யொட்டி உதாரண விளக்கங்கள் முன்னரும், விதிகள் பின் னரும் அமைக்கப்பட் டிருக்கின்றன. இஃது ஐந் தாம் வகுப்பு மாணவர்கட்கு ஏற்றது. தமிழ் இலக்

கண இலகுபோத வரிசைகள், இக்காலத்தில் அறிஞர் களால் பெரிதும் போற்றப்படும் பொது மத்திய முறையை யொட்டி விளக்கமாக எழுதப்பட் டிருக் டிருக்கின்றன. இவற்றில் வகுப்பின் உயர்வுக் கேற்ப விஷயங்களும் எளிய முறையில் தெளிவாக விவரிக்கப்பட் டிருக்கின்றன. எல்லா விதிகட்கும் வழக்காற்றிலுள்ள புதிய உதாரணங்களே காட்டப் பட் டிருக்கின்றன. ஆகையால் இவற்றைக் கற்கும் மாணவர்கட்கு இலக்கணப்பயிற்சி வறட்சியா யிரா மல் உற்சாகத்தை அளிக்கும் என்று எண்ணுகின் றேன். எனவே ஆசிரியர்களும் மாணவர்களும் **தமிழ் இலக்கண இலகுபோத வரிசைகளை** விரும்பி யேற்று எனக்கு மேன்மேலும் ஊக்கம் கொடுக்க வேண்டுகின்றேன்.

சென்னை
1 — 1 — 33

வி. ராமசாமி.

பொருளடக்கம்.

—:(0):—

பொருள்		பக்கம்
I. வாக்கியம், சொல், எழுத்து	....	1-2-3
II. எழுத்தியல்		
1. உயிர்	....	4
2. மெய்	....	4-5
3. உயிர்மெய்	....	6
4. ஆய்தம்	....	6
5. சுட்டு	....	8
6. வினா	....	9
III. சொல்லியல்		
1. பெயர்ச்சொல்	....	10-11
திணை, பால், எண், இடம்	....	11-15
வேற்றுமை	....	16-17
வேற்றுமை உருபு ஏற்கும்போது திரியும் பெயர்கள்	....	20
உருபு ஏற்கும்போது சாரியை வருதல்		22
வேற்றுமைத் தொகை	....	23

பொருள்		பக்கம்
2. வினைச்சொல்	....	24
காலம்	....	25
வினைமுற்று	....	27-28
பெயரெச்சம், வினையெச்சம்	....	28-29
3. இடைச்சொல்	....	30
4. உரிச்சொல்	....	30-31
VI. சொற்றொடரியல்		
1. எச்சச்சொற்றொடர், முற்றுச் சொற்றொடர்	....	31-32
2. எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்	....	32-33
3, நிறுத்தல் குறிகள்	....	36-37
V. புணரியல்		
1. இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி		38-39
2. உயிர் முன் உயிர்	....	40
3. உயிர் முன் மெய்	....	41
4. மெய்ம் முன் உயிர்	....	41-42
5. மெய்ம் முன் மெய்	....	42

தமிழ்
இலக்கண இலகுபோதம்

1. தமிழ் மொழியைப் பிழையின்றித் திருத்த மாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல் இலக்கணம் என்று வழங்கப்படும். (இலக்கணம்-லக்ஷணம்=அழகு.)

வாக்கியம்

2. நாம் பேசுவதிலும் எழுதுவதிலும் பல சொற்களை உபயோகிக்கின்றோம். 'உழவன் ஏர் உழுகிறான்'' இது ஒரு வாக்கியம். இவ்வாக்கியத் தில் மூன்று சொற்கள் தொடர்ந்திருக்கின்றன. இதில் உழவன் இன்னது செய்கிறான் என்று பூரண மாக அறிந்து கொள்ளுகின்றோம். "உழவன்'' என் றாலும் "உழவன் ஏர்'' என்றாலும் பொருள் நன்கு முடியவில்லை; இவற்றின் அர்த்தத்தை முடித்துத் திட்டமாய்த் தெரிவிக்க வேறு சொல் தேவையாயிருக்கிறது. ஆகையால் "உழவன்" "ஏர்" என்னும் சொற்களுடன் "உழுகிறான்''என்பதையும் சேர்த்தால் பொருள் முடிந்து ஒரு முழுக்கருத்து நமக்கு விளங்குகிறது. இவ்வாறு சொற்கள் ஒன்

றுக்கு மேற்பட்டவை தொடர்ந்து பொருளைத் திட்ட மாய் முடித்துக் காட்டும் சொற்றொடர் வாக்கியம் எனப்படும். ஆதலால்

பல சொற்கள் தொடர்ந்துநின்று ஒரு முடிந்த கருத்தை அறிவிப்பது வாக்கியமாம்.

சொல்

3. "கண்ணன் பாடம் படித்தான்"-இவ்வாக்கி யத்தில் மூன்று சொற்கள் இருக்கின்றன. இவற் றுள், "கண்ணன்" என்பதில் நான்கு எழுத்துக்களும் "பாடம்" என்பதில் மூன்று எழுத்துக்களும், "படித் தான்" என்பதில் ஐந்து எழுத்துக்களும் இருக்கின் றன. "ஈ ஒரு பறவை" இந்த வாக்கியத்திலும் மூன்று சொற்கள் இருக்கின்றன. ஆனால் "ஈ" என்ற சொல் லில் ஒரு எழுத்தும், "ஒரு" என்ற சொல்லில் இரண்டு எழுத்துக்களும், "பறவை" என்ற சொல்லில் மூன்று எழுத்துக்களும் இருக்கின்றன. இவ்வாறு பல எழுத் துக்கள் சேர்ந்தாயினும், ஒரு எழுத்துத் தனியாக வாயினும் **பொருளை அறிவித்தால்** சொல் அல்லது பதம் எனப்படும். றிகவ, ணகு, பன்ம, ஞெ— இவைகளிலும் எழுத்துக்கள் சேர்ந்தும், தனித்தும் இருக்கின்றன. ஆனால் இவை சொற்கள் ஆக மாட்டா. ஏன்? எழுத்துக்கள் இரண்டு முத லாகச் சேர்ந்து நின்றாலும், ஒரே எழுத்துத் தனித்து நின்றாலும் ஏதேனும் பொருளை அறிவிக்க வேண்டும். ஆதலால்,

சொல் என்பது பல எழுத்துக்கள் தொடர்ந்தேனும், ஒரு எழுத்துத் தனியாகவேனும் பொருளை அறிவிப்பதாம்.

எழுத்து

4. "மாடு நல்லது"-இங்கே 'மாடு' என்ற சொல்லில் மா - டு என்னும் இரண்டு ஒலிகளும், 'நல்லது' என்னும் சொல்லில் ந - ல் - ல - து என்னும் நான்கு ஒலிகளும் இருக்கின்றன. இந்த ஒலிகள் இல்லாவிட்டால் அந்தச் சொற்களும் உண்டாக மாட்டா. இவ்விதமான ஓசைக்கு எழுத்து என்று பெயர் வழங்கப்படும். ஆதலால்,

எழுத்து என்பது சொல் அல்லது பதம் உண்டாவதற்கு முதற்காரணமாகும் ஓசையாம்.

(எழுதப்படும் எழுத்து அவ்வோசையைத் தெரிவிக்கும் அறிகுறியாகும். இது வரிவடிவு என்று வழங்கப்படும்.)

பயிற்சி

இலக்கணம் என்றால் என்ன? வாக்கியம் என்றால் என்ன? சொல் என்றால் என்ன? எழுத்து என்றால் என்ன? வாக்கியம், சொல், எழுத்து ஆகிய இம்மூன்றுக்கும் உள்ள சம்பந்தம் என்ன?

எழுத்தியல்

5. தமிழ் மொழியில் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் இருக்கின்றன. இவை உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்து என நான்கு வகைப்படும்.

உயிர் எழுத்து

6 வேறு எழுத்தின் உதவியின்றித் தாமே ஒலிக்கவல்ல எழுத்துக்கள் உயிர் எழுத்துக்களாம். அவை அ - ஆ, இ - ஈ, உ - ஊ, எ - ஏ, ஐ, ஒ - ஓ, ஔ என்னும் இப்பன்னிரண்டுமாம்.

(உயிரைப்போல் இயங்கும் வல்லமை இருப்பதால் உயிர் எழுத்துக்கள் என்று பெயர் பெற்றன.)

7. அவற்றுள் அ, இ, உ, எ, ஒ, என்னும் ஐந்து எழுத்துக்களும் குறுகிய ஓசை யுடையவை. ஆதலால் இவை குற்றெழுத்து அல்லது குறில் எனப் பெயர் பெறும்.

8. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துக்களும் நீண்ட ஓசை யுடையவை. ஆதலால் இவை நெட்டெழுத்து அல்லது நெடில் எனப் பெயர் பெறும்,

மெய் எழுத்து

9. உடம்பெல்லாம் உயிரின் உதவியின்றி இயங்குவதில்லை. இப்படியே சில எழுத்துக்களும்

இருக்கின்றன. ஆதலால் அவை மெய் எழுத்துக்கள் என்று வழங்கப்படுகின்றன. மெய் எழுத்துக்களுக்குத் தலையில் புள்ளி இருக்கும். (மெய்-உடம்பு)

10. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் இப்பதினெட்டும் மெய் எழுத்துக்களாம்.

குறிப்பு:—உயிரில்லாத உடம்பு இயங்காததுபோலவே தனி மெய் எழுத்துக்களையும் உச்சரிக்க முடியாது. இக், இங், இச் எனச் சாதாரணமாய் உச்சரிக்கப் படுகின்றன. இவ்விதமாய் உச்சரிக்கும் போதும் முதலில் உயிர் எழுத்தின் உதவி தேவையாயிருப்பதைக் கவனிக்கவும். க, ங, ச என்றுவது, ககரம், ஙகரம், சகரம் என்றுவது உச்சரித்தலே முறை.

11. மெய் எழுத்துக்களுள் க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வலிய ஓசை யுடையவை; ஆதலால் அவை வல்லெழுத்து அல்லது வல்லினம் என்று வழங்கப்படும்.

12. ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லிய ஓசை யுடையவை; ஆதலால் அவை மெல்லெழுத்து அல்லது மெல்லினம் என்று வழங்கப்படும்.

13. ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் நடு அல்லது இடைத்தரமான ஓசை யுடையவை; ஆதலால் அவை இடையெழுத்து அல்லது இடையினம் என்று வழங்கப்படும்.

உயிர் மேய் எழுத்து

14. க் + அ = க, ங் + ஆ = ஙா இவ்விதம் உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்து எனப்படும். பதினெட்டு மெய்களுடன் பன்னிரண்டு உயிர்களும் தனித் தனியே கூடுதலால் உண்டாகும் உயிர்மெய் யெழுத்துக்கள் (18 × 12 = 216) இருநூற்றுப் பதினாறு ஆகும்.

உதாரணம்:—

க்+அ=க	க்+எ=கெ
க்+ஆ=கா	க்+ஏ=கே
க்+இ=கி	க்+ஐ=கை
க்+ஈ=கீ	க்+ஒ=கொ
க்+உ=கு	க்+ஓ=கோ
க்+ஊ=கூ	க்+ஔ=கௌ

இவ்விதமே மற்ற மெய்யெழுத்துக்களின் மீதும் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களையும் ஏற்றினால் உயிர்மெய் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறாகும். இவற்றை அடுத்த பக்கத்தில் காண்க.

ஆய்த எழுத்து

15. ஆய்த எழுத்து ஃ இவ்விதம் மூன்று புள்ளி வடிவாயிருக்கும். இவ்வெழுத்து அஃது இஃது எஃது என்னும் இம் மூன்றிலும் வருவது போல் சொல்லின் இடையில் மாத்திரமே வரும்.

குறிப்பு:—ஆய்தவெழுத்து அஃகேனம் என்றும் வழங்கப்படும்.

உயிர்மெய்யெழுத்துக்கள்.

	உயிர் 12.											
	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
மெய் 18.	உயிர்மெய் 216.											
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

16. உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும், உயிர்மெய் இருநூற்றுப் பதினாறும், ஆய்தம் ஒன்றும் சேர்ந்து தமிழ்ப்பாஷையில் உள்ள எழுத்துக்கள் இருநூற்று நாற்பத்தேழு ஆதல் அறிக.

குறிப்பு:—ஜ், ஷ், ஸ், ஹ, க்ஷ என்னும் வடமொழி மெய்களும், அவைகளின் உயிர்மெய்களும் இக்காலத்தில் தமிழில் வந்து வழங்குகின்றன.

பயிற்சி:—உயிர் எழுத்துக்கள் எவை? குற்றெழுத்து என்றால் என்ன? அவை எத்தனை? நெட்டெழுத்து என்றால் என்ன? அவை எத்தனை? மெய்யெழுத்துக்கள் எவை? அவை எத்தனை வகைப்படும்? வல்லெழுத்துக்கள் எவை? மெல்லெழுத்துக்கள் எவை? இடை எழுத்துக்கள் எவை? வல்லினம், மெல்லினம் இடையினம் - இவற்றின் பெயர்க்காரணம் என்ன? உயிர் மெய் எழுத்து என்றால் என்ன? உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை? "அஃகம் சுருக்கேல்" இதிலுள்ள உயிர், மெய், உயிர் மெய், ஆய்தம் ஆகிய இவ்வெழுத்துக்களை எடுத்துக் காட்டுக. "கல்விக்கழகு கசடற மொழிதல்" இதிலுள்ள வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களைக் குறிப்பிடுக.

சுட்டெழுத்து

17. "அம்மனிதன், இம்மரம், உப்பலகை" - இச்சொற்களுக்கு முறையே அந்த மனிதன், இந்த மரம், உந்தப் பலகை என்று பொருள். அம்மனிதன் என்பதில் 'அ' என்னும் குற்றெழுத்துத் தூரத்திலுள்ள மனிதனைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. இம்மரம் என்பதில் 'இ' என்னும் குற்றெழுத்துப் பக்கத்தில் உள்ள மரத்தைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. உப் பலகை என்பதில் 'உ' என்னும் குற்றெழுத்துப்

பின்பக்கத்திலுள்ள பலகையைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. ('உ' நடுவிலுள்ள பொருளையும் மேலேயுள்ள பொருளையும் சுட்டிக்காட்டவும் வரும். உகரச்சுட்டு செய்யுளில்தான் பயின்று வரும். உரை நடையில் வருதல் இல்லை) ஆதலால்,

அ, இ, உ இம் மூன்று குற்றெழுத்துக்களும் சுட்டுப் பொருளில் வரும்போது சுட்டெழுத்து எனப்படும்.

குறிப்பு:—அண்ணன், இருள், உழுந்து என்னும் சொற்களில் அ, இ, உ என்னும் எழுத்துக்கள் சுட்டிக்காட்டும் பொருளில் வரவில்லை. ஆகையால் அவை சுட்டெழுத்துக்கள் ஆகமாட்டா.

வினா எழுத்து

18. 'எவன்?' 'யாவை?' இச்சொற்கள் முறையே எந்த மனிதன்? எந்தப் பொருள்கள்? என்னும் வினாப் (கேள்வி) பொருளைத்தரும். இவற்றில் வினாப் பொருளைத் தரும் எழுத்துக்கள் எ, யா என்பன. கந்தன் வந்தானா? ராமனோ போனான்? இவற்றில் வினாப்பொருளைத் தரும் எழுத்துக்கள் ஆ, ஓ என்பன. இப்பலகை ஏது? அவனே போனான்? இவற்றில் வினாப்பொருளைத் தருவது ஏ என்னும் எழுத்து. ஆதலால்

எ, யா, ஆ, ஓ, ஏ இந்த ஐந்து எழுத்துக்களும் வினாப்பொருளில் வரும்போது வினா எழுத்துக்கள் எனப்படும்.

குறிப்பு:—எ, யா என்னும் இரண்டும் மொழிக்குமுதலிலும், ஆ, ஓ என்னும் இரண்டும் மொழிக்கு ஈற்றிலும், ஏ மொழிக்கு முதல் இறுதி ஆகிய இரண்டிடத்திலும் வரும்.

பயிற்சி

அடியில் வரும் வாக்கியங்களில் சுட்டெழுத்துக்கள் எவை?

(1) அவன் எங்கே போனான்? (2) அந்த அழகிய மலரைப் பார். (3) இவன் இளைஞன். (4) இக்குதிரை வண்டி இழுக்கும்.

அடியில் வரும் வாக்கியங்களில் வினா எழுத்துக்கள் எவை?

(1) இவ்விரண்டு பழங்களில் எது நல்லது?

(2) யாங்கள் எழுதவேண்டிய பாடம் யாது?

(3) தாத்தா வந்தாரா?

(4) அவன் வராமல் இருப்பானோ?

(5) ஏர் எது?

சொல்லியல்

சொற்களின் வகை

19 தமிழ் மொழியில் உள்ள சொற்கள் பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

பெயர்ச் சொல்

20. "ராமன் பந்து விளையாடினான்"—இவ் வாக்கியத்தில் உள்ள 'ராமன்' என்னும் சொல் ஒரு பையனையும் 'பந்து' என்னும் சொல் ஒரு வஸ்துவை

யும் குறித்து நிற்கின்றன. இவ்வாறு மனிதனை யோ வேறு பொருளையோ அறிவிக்கும் சொல் லுக்குப் பெயர்ச்சொல் என்று பெயர். ஆதலால்,

பொருளின் பெயரைத் தெரிவிப்பது பெயர்ச் சொல்லாம்.

பெயர்ச்சொல்லின் வகை

21. (1) மனிதன், மாடு, மரம். (2) நாடு, நகரம், காடு. (3) நாள், பகல், சித்திரை. (4) தலை, கால், கிளை (5) நன்மை, கோபம், வெண்மை. (6) நடத்தல், செய்கை, செலவு. இச்சொற்களிற் சில பொருட் பெயரையும், சில இடப் பெயரையும், சில காலப் பெயரையும், சில சினைப் (உறுப்பு) பெயரையும், சில பண்புப் (குண) பெயரையும் உணர்த்தி நிற் கின்றன. ஆதலால்,

பெயர்ச்சொல் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என ஆறு வகையாம்.

22. பெயர்ச் சொல்லில் **திணை, பால், எண், இடம், வேற்றுமை,** என்னும் ஐந்தையும் அறிய வேண்டும்.

திணை.

23. தமிழ் இலக்கணத்தில் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் இரண்டு பெரும் பிரிவாகப்

பிரிக்கப்பட்டிருக்கின்றன. அப்பிரிவுக்குத் திணை என்று பெயர். திணை—குலம், வகுப்பு.

24. திணை உயர்திணை என்றும், அஃறிணை என்றும் இரண்டு வகைப்படும். உயர் திணை என்பது உயர்வாகிய (மேலாகிய) திணை; அஃறிணை என்பது உயர்வல்லாத (தாழ்ந்த) திணை, (அல்+திணை= அஃறிணை)

25. சுந்தரன், கம்பன், தமயந்தி, மக்கள், பிரமன், இந்திரன், வருணன்—இங்கே குறிக்கப்பட்ட மனிதர்களும் தேவர்களும் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆதலால்

மனிதர்களும் தேவர்களும் உயர்திணையாம்.

26. சிங்கம், பறவை, மரம், மண், கல் இங்கே குறிக்கப்பட்ட உயிருள்ளவையும் உயிர் இல்லாதவையும் மக்கள் தேவரைவிடத் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவை. ஆதலால்,

உயர்திணை யல்லாத ஏனைய உயிருள்ளவை உயிர் இல்லாதவை ஆகிய எல்லாப் பொருள்களும் அஃறிணையாம்.

பால்

27. பால் என்பது திணையின் உட்பிரிவு. (பால்-பகுப்பு, பிரிவு.) உயர்திணையில் மூன்றும், அஃறிணையில் இரண்டுமாகப் பால் ஐந்து வகைப்படும்.

28. ஆண்பால், பெண்பால், பலர்பால்- இம்மூன்றும் உயர்திணைக் குரியவை.

29. ஒன்றன்பால், பலவின்பால்-இவ்விரண்டும் அஃறிணைக் குரியவை.

30. ஆண்பால் ராமன், - அரசன் என ஒரு ஆணைக் குறிப்பது.

பெண்பால் சிவகாமி, அரசி என ஒரு பெண்ணைக் குறிப்பது.

பலர்பால் அரசர்கள், அரசிகள், மக்கள் எனப் பலரைக் குறிப்பது.

ஒன்றன்பால் மாடு, மரம், கல் என ஒரு பொருளைக் குறிப்பது.

பலவின்பால் மாடுகள், மரங்கள், கற்கள் எனப் பல பொருள்களைக் குறிப்பது.

பயிற்சி

பெயர்ச் சொல் எத்தனை வகைப்படும்? உயர்திணைப் பெயர்கள் எவை? அஃறிணைப் பெயர்கள் எவை? பால் எத்தனை வகைப்படும்? அவை எவை? உயர்திணைக்குரிய பால்கள் எவை? அஃறிணைக்குரிய பால்கள் எவை?

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களுக்குத் திணையும் பாலும் கூறுக.

1. ராமன் சீதையை மணந்தான்.
2. மல்லிகை மணம் இனிது.
3. மாணவர்கள் பாடம் படிக்கிறார்கள்.
4. பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன.

எண்

31. எண் என்பது பொருள்களின் அளவு அல்லது எண்ணிக்கை. எண் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டது என்பதை அறிவிக்கும்.

32 ஒன்றை அறிவிப்பது ஒருமை.

(உ - ம்) மனிதன், பலகை, வீடு.

33. ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு முதலியவற்றை அறிவிப்பது பன்மை.

(உ - ம்) மனிதர்கள், பலகைகள், வீடுகள்.

குறிப்பு:—ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகியமூன்றும் ஒருமை எண்ணுக்குரிய பால்கள், பலர்பால், பலவின் பால் ஆகிய இரண்டும் பன்மை எண்ணுக்குரிய பால்கள் என அறிக.

இடம்.

34. "நான் உன்னுடைய தம்பியை அடித்தேன்"—இந்த வாக்கியத்தில் பேசுவோன் "நான்" என்னும் பதத்தால் தன்னை அறிவிக்கிறான். "உன்னுடைய" என்னும் சொல்லால் முன்னிலையில் உள்ளவனைத் தெரிவிக்கிறான். "தம்பியை" என்னும் சொல்லால் தானும் முன்னிலையில் உள்ளவனும் அல்லாத வேறொருவனைக் குறிக்கிறான். இவற்றுள் நான் தன்மையிடம். உன்னுடைய (நீ) முன்னிலையிடம். தம்பியை (தம்பி) படர்க்கையிடம். ஆதலால்,

இடம் என்பது சொற்கள் வழங்கும் ஸ்தானம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

35. தன்மை: பேசுவோனையும் அவனைச் சேர்ந்தோரையும் குறிப்பது தன்மை.

36. முன்னிலை: முன்னிலையிலுள்ளவர்களைக் குறிப்பது முன்னிலை.

37. படர்க்கை: தன்மை முன்னிலையல்லாத பேசப்படுவோர், பேசப்படும் பொருள்கள் ஆகிய எல்லாம் படர்க்கை.

குறிப்பு:- தன்மை முன்னிலைப் பெயர்கள் திணை பால்களை உணர்த்தாமல் ஒருமை பன்மை என்னும் எண்களை மட்டும் உணர்த்தும். படர்க்கைப் பெயர்கள் திணை, பால், எண் ஆகிய எல்லாவற்றையும் உணர்த்தும்.

உதாரணம்

1. தன்மை { ஒருமை—யான், நான்
பன்மை—யாம், நாம், யாங்கள் நாங்கள்.

2. முன்னிலை { ஒருமை—நீ
பன்மை—நீர், நீங்கள்.

3. படர்க்கை { ஒருமை—அவன், அவள், அது.
பன்மை—அவர்கள், அவைகள்.

பயிற்சி.

கீழ் வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களின் திணை, பால், எண், இடம் இவற்றைக் குறிப்பிடுக.

1. நான் கொடுத்த பேனவை அவன் உனக்குக்கொடுப்பான்.
2. நீங்கள் பாட புத்தகங்களை எடுத்துக் கொள்ளுங்கள்.
3. பசுக்கள் பால் கொடுக்கின்றன.
4. தேவர்கள் அமிர்தம் உண்டார்கள்.
5. நாங்கள் ஒழுங்காய்ப் பாடம் படிப்போம்.
6. குரங்கு குறும்புள்ள பிராணி.
7. நீ எனது புத்தகத்தை எங்கே வைத்தாய்?

வேற்றுமை.

38. வாக்கியங்களில் பெயர்ச் சொற்கள் கருத்தாப் பொருள் முதலிய எட்டு விதங்களில் மாறுபட்டு வழங்கும். "உழவன் வயலை ஏரால் உழுதான்" இவ்வாக்கியத்தில் உழுகின்ற காரியத்தைச் செய்பவன் உழவன். ஆகையால் "உழவன்" என்னும் பெயர்ச் சொல் உழவனுக்குரிய பெயராக மட்டும் நில்லாமல் அவன் இன்ன காரியத்தைச் செய்தான் என்னும் கருத்தாப் பொருளில் வந்தது. (கருத்தா—செய்பவன்) கருத்தாவின் செயலை ஏற்றுக் கொள்வது வயல்; அதாவது உழப்படுவது வயல்; ஆதலால் வயலை என்பது செயப்படுபொருளில் வந்தது. உழுதலுக்குக் கருவியாயிருப்பது ஏர்; ஆதலால் ஏரால் என்பது கருவிப்பொருளில் வந்தது. இவ்வாறு பெயர்ச் சொற்களின் பொருள் வேறுபடுவது வேற்றுமை எனப்படும். ஆதலால்,

வேற்றுமை என்பது வருமொழியைக் கொண்டு பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவதாம். அங்ஙனம் மாறுபட்டுள்ள வேற்

றுமையைக் காட்டும் அறிகுறியாக வருகின்ற சொல் 'வேற்றுமை உருபு' எனப்படும். இது பெயரின் இறுதியில் வரும்.

39. முதல்வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என வேற்றுமை எட்டு வகைப்படும்.

40. முதல் வேற்றுமைக்கு வேறு தனி உருபு இல்லை. யாதொரு மாறுதலும் இல்லாத இயல்பான பெயரே முதல் வேற்றுமை உருபாகக் கருதப்படும்.

(உ - ம்) கண்ணன் கல் எறிந்தான்.
நான் புத்தகம் வாங்கினேன்.

இவற்றுள் கண்ணன், நான் என்னும் பெயர்கள் முதல் வேற்றுமை.

குறிப்பு:— முதல் வேற்றுமைப் பெயரே ஒரு வாக்கியத்தின் எழுவாயாக வரும். இதனால் அது எழுவாய் வேற்றுமை என்றும் வழங்கப்படும். நான் என்னும் பெயர் முதல் வேற்றுமையில் மாத்திரம் வரும்.

41. இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாம்.

(உ - ம்) குதிரை புல்லைத் தின்றது.
அரசன் கோயிலைக் கட்டினான்.

இவற்றுள் புல்லை, கோயிலை என்னும் சொற்கள் இரண்டாம் வேற்றுமை.

குறிப்பு:— இரண்டாம் வேற்றுமைப் பெயர்ச்சொல்லே ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருளாக வருவதால் அது செயப்படு பொருள் வேற்றுமை என்றும் வழங்கப்படும்.

42. மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஒடு, உடன் முதலியவைகளாம்.

(உ - ம்) பொன்னால் நகை செய்யப்பட்டது.
கண்ணனோடு பொன்னன் போனான்.
தாயுடன் மகள் சென்றாள்.

43. நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதாம்.

(உ - ம்) யாசகர்க்குப் பொருள் கொடுத்தான்.
கூலிக்கு வேலை செய்தான்.

குறிப்பு:— கு என்பதுடன் ஆக என்பது சேர்ந்து நான்காம் வேற்றுமை உருபாக வருதலும் உண்டு.

(உ - ம்) பணத்திற்காகப் பாடுபட்டான்.

44. ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இன் இல் என்பனவாம்.

(உ - ம்) கண்ணனின் பெரியவன் ராமன்.
காக்கையில் கரியது களாப்பழம்.

குறிப்பு:— இன், இல் உருபுகளின் மேல் நின்று இருந்து என்பவை கூடி ஐந்தாம் வேற்றுமை உருபுகளாக வருதலும் உண்டு.

(உ - ம்) மதுரையினின்று வந்தான்.
மரத்திலிருந்து விழுந்தான்.

45. ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, உடைய என்பனவாம்.

(உ - ம்) அரசனது அரண்மனை.
ராமனுடைய தம்பி.

46. ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், இடம், கண் முதலியனவாம்.

(உ - ம்) மரத்தில் பழம் இருக்கிறது.
அவனிடம் நான் புத்தகம் கொடுத்தேன்.
காட்டின்கண் விலங்குகள் வசிக்கும்.

47. எட்டாம் வேற்றுமையின் உருபுகள் பெயர்ச்சொல்லின் ஈறு திரிதல், ஈற்றில் ஏகாரம் மிகுதல், ஈறு குறைந்து வருதல், ஈறுகெட்டு அயல் திரிதல் முதலியனவாம். பெயர்ச் சொல் எவ்வித மாறுதலும் இன்றி இயல்பாகவே நிற்றலும் உண்டு. இவ் வேற்றுமை விளித்தல் பொருளில் வரும். (விளித்தல்—அழைத்தல் , கூப்பிடுதல்) இதனுல் இது விளிவேற்றுமை என்றும் சொல்லப்படும்.

(உ - ம்) தந்தாய்!கொடு- ஈற்றிலுள்ள 'ஐ' 'ஆய்' எனத் திரிந்தது.
மகனே! வீட்டுக்கு வா- ஈற்றில் 'ஏ' மிகுந்தது.
நண்ப! இங்கு வா- ஈற்றில் உள்ள 'ன்' குறைந்தது.
ராமா! பேசாதே- ஈற்றில் உள்ள 'ன்' கெட்டு, அயல் எழுத்து நீண்டது.

தம்பி! இங்கே வா—தம்பி என்னும் பெயர் எவ் வித மாறுதலும் இன்றி இயல்பாகவே நின்றது.

குறிப்பு:— தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர் களும், தான், தாம், என்னும் படர்க்கைப் பெயர்களும் எட்டாம் வேற்றுமையில் வாரா.

48. வேற்றுமை உருபு ஏற்கும்போது சில பெயர்கள் வடிவத்தில் திரியும். அவை யான், யாம், நாம், நீ, நீர், தான், தாம் என்பன.

49. 'யான்' என்பது வேற்றுமை உருபு ஏற் கும்போது 'என்' எனத் திரியும்.

1.	யான்	5.	என்னின்
2.	என்னை	6.	எனது
3.	என்னால்	7.	என்னிடம்
4.	எனக்கு	8.	

50. 'யாம்,' 'நாம்' என்பன வேற்றுமை உருபு ஏற்கும்போது யாம் என்பது 'எம்' என வும், நாம் எனபது 'நம்' எனவும் திரியும்.

1.	யாம்	1.	நாம்
2.	எம்மை	2.	நம்மை
3.	எம்மால்	3.	நம்மால்
4.	எமக்கு	4.	நமக்கு
5.	எம்மின்	5.	நம்மின்
6.	எமது	6.	நமது
7.	எம்மிடம்.	7.	நம்மிடம்
8.		8.	

51. 'நீ' என்பது வேற்றுமை உருபு ஏற்கும்போது 'நின்' அல்லது 'உன்' எனத் திரியும்.

1. நீ	1. நீ
2. நின்னை	2. உன்னை
3. நின்னால்	3. உன்னால்
4. நினக்கு	4. உனக்கு
5. நின்னின்	5. உன்னின்
6. நினது	6. உனது
7. நின்னிடம்	7. உன்னிடம்
8.	8.

52. 'நீர்' என்பது வேற்றுமை உருபு ஏற்கும்போது 'நும்' அல்லது 'உம்' எனத் திரியும்

1. நீர்	1. நீர்
2. நும்மை	2. உம்மை
3. நும்மால்	3. உம்மால்
4. நுமக்கு	4. உமக்கு
5. நும்மின்	5. உம்மின்
6. நுமது	6. உமது
7. நும்மிடம்	7. உம்மிடம்
8.	8.

53. 'தான்' 'தாம்' என்பன வேற்றுமை உருபு ஏற்கும்போது தான் என்பது 'தன்' எனவும், தாம் என்பது 'தம்' எனவும் திரியும்.

1. தான்	1. தாம்
2. தன்னை	2. தம்மை
3. தன்னால்	3. தம்மால்
4, தனக்கு	4. தமக்கு

5. தன்னின்	5. தம்மின்
6. தனது	6. தமது
7. தன்னிடம்	7. தம்மிடம்
8.	8.

உருபு ஏற்கும்போது சாரியை வருதல்,

54. மகரமெய் இறுதியில் வரும் பெயர்ச் சொற்கள் இரண்டாம் வேற்றுமை முதலிய உருபு ஏற்கும்போது அம் என்பது கெட அத்துச் சாரியை பெறும்.

மரம்+ஐ—மரத்தை
மரம்+ஆல்—மரத்தால்
மரம்+கு—மரத்துக்கு
மரம்+இன்—மரத்தின்
மரம்+அது—மரத்தினது
மரம்+இல்—மரத்தில்

குறிப்பு:—மரம் என்பதில் அம் கெட மர் என நிற்கும் அதனோடு அத்து என்பது சேர (மர்+அத்து) மரத்து என்றாகும். அதனோடு இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ என்பது சேர மரத்தை என்றாயிற்று. இவ்வாறே மற்ற வேற்றுமை உருபுகளையும் சேர்த்துப் பார்க்க.

55. அகர உயிர் இறுதியில் வரும் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது அற்றுச்சாரியை பெறும்.

பல+ஐ—பலவற்றை
சில+ஆல்—சிலவற்றால்

குறிப்பு:—பலவற்றை என்பதைப் பிரித்தால் பல—அற்று—ஐ

என்றாகும். இடையில் நின்ற **அற்று** என்பது சாரியை.

56. வை என்னும் உயிர்மெய் இறுதியில் வரும் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது ஐ என்பது கெட அற்றுச்சாரியை பெறும்.

அவை + ஐ—அவற்றை
எவை + ஐ—எவற்றை

குறிப்பு:—அவை என்பதில் ஐ கெட **அவ்** என நிற்கும். **அத**னோடு **அற்றுச்** சேர்ந்தால் **அவற்று** என்றாகும். இதனுடன் ஐ என்னும் உருபு சேர **அவற்றை** என்றாயிற்று. இவ்வாறே பிறவும் கொள்க.

வேற்றுமைத்தொகை

57. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையில் உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் அவற்றின் உருபுகள் வெளிப்படையாகத் தோன்றி நிற்றலே யன்றி மறைந்து (தொக்கு) நிற்றலும் உண்டு. இவ்வாறு வேற்றுமை உருபு தொக்கு நிற்றல் வேற்றுமைத் தொகை என்று கூறப்படும்.

(உ - ம்)

மரம் வெட்டினான்—	இரண்டாம் வேற்றுமைத் தொகை	
தலை வணங்கினான்—	மூன்றாம்	,,
பள்ளிக்கூடம் சென்றான்—	நான்காம்	,,
ஊர் நீங்கினான்—	ஐந்தாம்	,,

கண்ணன் கை— ஆறும் வேற்றுமைத் தொகை
நீர்ப் பறவை— ஏழாம் ,,

குறிப்பு:— வேற்றுமை உருபு வெளிப்படையாய்த் தோன்றி நிற்றல் வேற்றுமை விரி எனப்படும்.

பயிற்சி

I பொன்னன், பெண், குழந்தைகள், அன்னை, தந்தை, அன்பன், பிள்ளை இச் சொற்களுக்கு எட்டு வேற்றுமையும் கூறுக.

II கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களில் ஒவ்வொன்றும் என்ன வேற்றுமை?

1. நான் கண்ணனைக் கண்டேன்.
2. வண்டு தேனைக் குடிக்கும்.
3. பிள்ளாய்! பாடம் படி.
4. மூடனுக்கு அறிவு இல்லை.
5. நான் வீட்டினின்று போனேன்.
6. மரத்தின்கண் பறவை இருக்கிறது.
7. பூனை பால் குடித்தது.
8. அவன் கண்ணில் நீர் வருகிறது.
9. உன்னுடைய தந்தை பெயர் என்ன?
10. அண்ணா! இங்கு வா.
11. இடையன் ஆடு மேய்த்தான்.

111 நாம், நீ, தாம்—இப் பெயர்ச்சொற்களுக்கு முதல் ஏழு வேற்றுமையும் கூறுக.

வினைச் சொல்

58. ராமன் வந்தான்; உண்கிறான்; போவான்-- இங்கே ராமனைப்பற்றி மூன்று செயல்கள் கூறப்பட்டிருக்கின்றன. ராமன் 'வந்தான்' என்பது ராமன்

170877

முன்னே செய்த செய்கையை உணர்த்துகிறது. 'உண்கிறான்' என்பது ராமன் இப்போது செய்து கொண்டிருக்கும் செய்கையை உணர்த்துகிறது. 'போவான்' என்பது ராமன் இனிமேல் செய்யும் செய்கையை உணர்த்துகிறது. இவ்விதம் செய்கை உணர்த்தும் சொல் வினைச்சொல் என்று கூறப் படும் (வினை—செய்கை.) ஆதலால்,

பொருளின் செய்கையை அல்லது தொழிலை உணர்த்துவது வினைச்சொல்லாம்.

170877

பெயர்ச்சொல்லைப்போல் வினைச்சொல்லும் திணை, பால், எண், இடங்களைக்காட்டுவதோடு காலத்தையும் காட்டும். வினைச்சொல் பெயர்ச்சொல்லைப் போல் வேற்றுமையை ஏற்காது.

குறிப்பு:—திணை, பால், எண், இடம்—இவை முன்னர் விளக்கப்பட்டுள்ளன.

+B
P31(5)
N33

காலம்

59. **காலம் என்பது செய்கையின் நிகழ்ச்சி எப்போது என்று தெரிவிப்பது. அது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப் படும்.**

60. **காலத்தை இடைநிலைகள் காட்டும். இடைநிலை என்பது சொல்லின் இடையில் நிற்கும் உறுப்பு.**

இறந்த காலம்.

61. அடித்தான்; கொண்டான்; சென்றான்; பாடினான்—இச் சொற்கள் அடித்தல், கொள்ளல்,

செல்லல், பாடல் ஆகிய இச்செய்கைகள் முன்பே நடைபெற்றுவிட்டதைக் குறிக்கின்றன. செய்கை நிகழ்ந்துவிட்ட காலம் இறந்தகாலம் எனப்படும். இவற்றுள் த், ட், ற், இன் என்னும் நான்கும் இடைநிலைகளாக இருத்தல் கவனிக்க. ஆதலால்,

செய்கை அல்லது தொழில் முன்பே நடந்ததைத் தெரிவிப்பது இறந்தகாலமாம். இறந்தகாலங் காட்டும் இடைநிலைகள் த், ட், ற், இன் என்பனவாம்.

(உ - ம்) படித்தான், உண்டான், நின்றான், தேடினான்.

நிகழ்காலம்

62. செய்கிறான், செய்கின்றான்,—இச் சொற்கள் செய்தல் ஆகிய தொழில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதைத் தெரிவிக்கின்றன. இது நிகழ்காலம் எனப்படும். செய்கை நிகழ்ந்து கொண்டிருக்கும் காலம் நிகழ்காலம். இவற்றுள் கிறு, கின்று என்னும் இரண்டும் இடைநிலைகளாக இருப்பது கவனிக்க. ஆதலால்,

தொழில் இப்பொழுது நிகழ்ந்துகொண்டிருப்பதைத் தெரிவிப்பது நிகழ்காலமாம். நிகழ்கால இடைநிலைகள் கிறு, கின்று என்பனவாம்.

(உ - ம்) நடக்கிறான், ஓடுகின்றான்.

எதிர் காலம்

63. நடப்பான், போவான்—இச் சொற்கள் நடத்தல், போதல் ஆகிய செய்கைகள் **இனிமேல்** நடைபெறப்போவதை அறிவிக்கின்றன. இது எதிர்காலம் எனப்படும். இனிமேல் செய்கை நிகழும் காலம் எதிர்காலம். இவற்றுள் ப், வ் என்னும் இரண்டும் இடைநிலைகளாக இருப்பது கவனிக்க. ஆதலால்,

இனிமேல் தொழில் நடக்கப் போவதைத் தெரிவிப்பது எதிர்காலமாம். எதிர்கால இடைநிலைகள் ப், வ் என்பனவாம்.

(உ-ம்) காண்பான், வருவான்.

பயிற்சி

காலங்கள் எத்தனை? அவை எவை? அவற்றைக் காட்டும் இடைநிலைகள் எவை?

64. வினைச்சொற்கள் வினைமுற்று, பெயரெச்சம், **வினையெச்சம்** என மூன்று வகைப்படும்.

வினைமுற்று

65. கண்ணன் வந்தான்; பாடம் படிக்கிறான்—இவற்றுள் 'வந்தான்' 'படிக்கிறான்', என்னும் வினைச் சொற்கள் கருத்து முடிந்து நிற்கின்றன. இவற்றின் கருத்தை முடிக்க வேறு சொல் தேவை இல்லை.

நிற்க, இச் சொற்களில் திணை, பால், எண், இடம் ஆகியவைகளையும் அறியலாம். இவ்விதம் கருத்து முற்றித் திணை, பால், எண், இடம் ஆகியவைகளைக் காட்டி நிற்கும் வினைச்சொல் வினைமுற்று எனப் படும். ஆதலால்,

வினைமுற்று என்பது கருத்து முடிந்து திணை, பால், எண், இடங்களைக் காட்டிநிற்கும் வினைச்சொல்லாம்.

(உ - ம்) செய்தான், செய்கிறான், செய்வான்.

பெயரெச்சம்

66. நடந்த பையன்; ஓடுகின்ற குதிரை; கடிக்கும் நாய்—இவற்றுள் 'நடந்த' 'ஓடுகின்ற' 'கடிக்கும்' என்பன வினைச்சொற்கள். இவற்றின் பொருள்கள் முறையே 'பையன்', 'குதிரை', 'நாய்' என்னும் பெயர்ச்சொற்களை நோக்கி முடிகின்றன. பின்னே வரும் பெயர்ச் சொற்கள் இன்றி நடந்த, ஓடுகின்ற, கடிக்கும் என்று மாத்திரம் இருந்தால் பொருள் முடிவதில்லை. இவற்றின் பொருள்களை முடிப்பது பின்னே வரும் பெயர்ச்சொற்கள். இவ்வாறு பெயர்ச்சொல்லால் கருத்து முற்றுப்பெறும் வினைச் சொல் பெயரெச்சம் எனப்படும். ஆதலால்,

பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் வினைச் சொல் பெயரெச்சமாம்.

(உ - ம்) படித்த பையன், படிக்கின்ற பையன், படிக்கும் பையன்.

குறிப்பு:— பெயரெச்சம்—பெயரைக்கொண்டு முடிவதாகிய குறைந்து நிற்கும் சொல். எஞ்சுவது-எச்சம்—அதாவது இங்கே முடிக்கும் சொல்.

வினையெச்சம்

67. 'நடந்து வந்தான்'; 'படிக்கப் போனன்' இவற்றுள் நடந்து, படிக்க என்னும் வினைச் சொற்கள் வந்தான், போனன் என்னும் வினைச்சொற்களை வேண்டி நிற்கின்றன. பின்னே வரும் வினைச் சொற்கள் இன்றி, நடந்து, படிக்க என்று மாத்திரம் இருந்தால் பொருள் முடிவதில்லை. இவற்றின் பொருள்களை முடிப்பது பின்னே வரும் வினைச் சொற்கள். இவ்வாறு வினைச்சொல்லால் பொருள் முற்றுப்பெறும் வினைச்சொல் வினையெச்சம் எனப்படும். ஆதலால்,

வேறொரு வினைச்சொல்லைக்கொண்டு முடியும் வினைச்சொல் வினையெச்சமாம்.

குறிப்பு:— வினையெச்சம்—வினையைக்கொண்டு முடிவதாகிய குறைந்து நிற்கும் சொல்.

(உ - ம்) உழுது வந்தான்
அடிக்கப் போனன்.
உண்டால் மகிழ்வான்
ஓடி ஆடினன்
போய்ப் பார்த்தான்

(பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய இரண்டிலும் திணை, பால், எண் இடங்களைக் கண்டு பிடிக்க

முடியாது. கொண்டு முடியும் சொற்களால் தான் அவற்றை அறிந்துகொள்ள முடியும்.)

பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களில் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சங்கள் எவை?

1. கண்ணன் கற்று அறிந்தான்.
2. அடித்த பையன் ஓடிப்போனான்.
3. ஆசிரியர் பாடம் போதிக்க வந்தார்.
4. படித்தால் பயன் அடையலாம்.
5. மழைபெய்ய நெல் விளைந்தது.
6. போன மனிதன் திரும்பி வந்தான்.

இடைச்சொல்

68. இடைச்சொல் என்பது பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவைகளைப்போல் தனியாக வராமல் அவைகளைச் சார்ந்துவரும் சொல்லாம்.

வேற்றுமை உருபுகள், இடைநிலைகள், சாரியைகள், சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள் முதலியவை இடைச் சொற்களாம்.

உரிச்சொல்

69. உரிச்சொல் என்பது பெயர்ச்சொல், வினைச்சொற்களின் குணத்தை அறிவித்து அவற்றை அடுத்து வரும் சொல்லாம்.

(உ-ம்) சால, உறு, தவ, நனி முதலியன உரிச்சொற்களாம்.

சால, உறு, தவ, நனி என்பவற்றிற்கு மிகுதி என்பது பொருள்.

(உ - ம்) நனி பேதை
சாலத் தின்றான்

சொற்றொடரியல்

70. மலைத்தொடர், வண்டித்தொடர் என்றாற்போல் சொற்றொடர் என்பது சொற்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்திப் பொருள் தரும் முறையில் தொடர்ந்து நிற்பதாம்.

எச்சச்சொற்றொடர் — முற்றுச்சொற்றொடர் என்று சொற்றொடர் இரண்டு வகைப்படும்.

எச்சச்சொற்றொடர்

71. 'நான் கடைக்கு'—'மாடு வந்து'—இவை இரண்டும் சொற்றொடர்களே; ஆனால் இவற்றில் பொருள் முடியவில்லை. ஆகையால் இவற்றின் பொருளை முடிக்க வேறு சொற்கள் தேவை. இப்படிச் சொற்கள் தொடர்வது எச்சச் சொற்றொடர் எனப்படும். ஆதலால்,

எச்சச்சொற்றொடர் என்பது அர்த்தம் முடிவு பெறாமல் சொற்கள் தொடர்ந்து நிற்பதாம்.

முற்றுச்சொற்றொடர்

72. 'நான் கடைக்குப்போய்ப் புத்தகம் வாங்கினேன்'—இதில் நான் கடைக்குப்போய் இன்னது

செய்தேன் என்று கருத்து முடிந்து நிற்கிறது. 'நான் கடைக்கு' என்றாலும் 'நான் கடைக்குப் போய்' என்றாலும் பொருள்முடியவில்லை. நான் கடைக்குப் போய்ப் புத்தகம் வாங்கினேன் என்று கூறும் போதே பொருள் முடிவுபெறுகிறது. இவ்வாறுவரும் சொற்றொடர் முற்றுச் சொற்றொடர் எனப்படும். இதுவேதான் வாக்கியம் என்றும் சொல்லப்படும். ஆதலால்,

முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் என்பது கருத்து முடிந்து பொருள் விளங்கும்படி சொற்கள் தொடர்ந்திருப்பதாம்.

73. ஒரு வாக்கியத்தில் செய்பவன்- அவன் செய்யும் தொழில் ஆகிய இரண்டும் முக்கியமான உறுப்புக்கள். அவன் செய்யும் தொழிலை ஏற்கும் பொருள் சில வாக்கியங்களில் வரும்; சில வாக்கியங்களில் வராது. இம் மூன்றும் முறையே எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என வழங்கப்படும்.

எழுவாய்—பயனிலை

74. 'கண்ணன் வந்தான்'—இது ஒரு வாக்கியம். இதிலுள்ள சொற்களில் 'வந்தான்' என்பதில் இவ் வாக்கியத்தின் பொருள் முடிந்து நிற்கிறது; அச்சொல் இல்லையேல் பொருள் முடிவு பெறாது. வாக்கியத்தின் பயன் அச்சொல்லிலேதான் நிலைத்திருக்கிறது. அதனால் **வந்தான்** என்பது பயனிலை. பயனிலை—(பயன் நிலை) பொருள் நிற்கப் பெற்றது.

வருதலாகிய காரியத்தைச் செய்பவன் கண்ணன்; கண்ணன் இல்லையானால் வருதலாகிய காரியமே நிகழாது. அதனால் **கண்ணன்** என்பது கருத்தா அல்லது எழுவாய் எனப்படும். கருத்தா—காரியத்தைச் செய்பவன். எழுவாய்—(காரியம்) எழும் அல்லது உண்டாகும் இடம். (வாய்-இடம்) ஆதலால்,

எழுவாய் என்பது ஒரு காரியத்தைச் செய்கின்ற கருத்தாவைக் குறிப்பதாம்.

(எழுவாய்-கருத்தா-செய்பவன்-வினைமுதல் என்பன ஒரு பொருட் சொற்கள்)

பயனிலை என்பது கருத்தா செய்யும் காரியத்தைத் தெரிவித்து வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்பதாம்.

குறிப்பு:—ஒரு வாக்கியத்தில் எழுவாய் தோன்றாமல் மறைந்திருப்பதும் உண்டு. அது தோன்றா எழுவாய் எனப்படும்.

பயனிலை பெரும்பாலும் வினைமுற்றாக இருக்கும். சிறுபான்மை பெயரும் வினாவும் வரும்.

செயப்படுபொருள்

75. 'கொல்லன் இரும்பை அடித்தான்'—இதில் 'கொல்லன்' எழுவாய். 'அடித்தான்' பயனிலை. கொல்லன் அடித்த தொழிலை அடைந்தது-அதாவது அடிக்கப்பட்டது இரும்பு. அதனால்

இரும்பை என்பது செயப்படுபொருள். செயப்படு பொருள்—செய்யப்படும் பொருள். ஆதலால்.

செயப்படுபொருள் என்பது கருத்தாவால் செய்யப்படும் தொழிலின் பயனை அடைவதாம்.

குறிப்பு:—செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமையாகவே இருக்கும்.

ஒவ்வொரு வாக்கியத்திலும் செயப்படுபொருள் இருந்தே தீரவேண்டும் என்ற நியதி இல்லை. செயப் படுபொருள் வாக்கியத்தில் வருவதும் வராததும் பய னிலையாகிய வினைச்சொல்லைப் பொறுத்தது.

76. வினைச்சொல் செயப்படுபொருள் குன் றியவினை என்றும், செயப்படுபொருள் குன்று வினை என்றும் இரண்டு வகைப்படும்.

77. செயப்படுபொருள் குன்றிய வினை என் பது செயப்படுபொருள் இல்லாத வினைச்சொல் லாம். செயப்படுபொருள் குன்று வினை என்பது செயப்படுபொருள் இருக்கும் வினைச்சொல்லாம்.

(உ - ம்) ராமன் வந்தான்—செயப்படுபொருள் குன்றிய வினை.

மாடு புல்லைத் **தின்றது**—செயப்படுபொருள் குன்று வினை.

குறிப்பு:—பயனிலைக்குமுன் 'யாரை' அல்லது 'எதை', என்னும் சொல்லை வைத்துக் கேள்வி கேட்டால் விடைவாராதது செயப்

படுபொருள் குன்றிய வினை என்றும், விடை கிடைத்தால் செயப்படு பொருள் குன்றாவினை என்றும் வேறுபாடு அறிந்து கொள்ளலாம். எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடம் இவைகளில் ஒத்திருக்கும்,

உதாரணம்

1. ராமன் புத்தகத்தைவாங்கினான்—இதில் ராமன்-எழுவாய். வாங்கினான்-பயனிலை. புத்தகத்தை-செயப்படுபொருள்—இவ் வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் வந்தன.

2. கந்தன் போனான்—இதில் கந்தன்-எழுவாய். போனான்-பயனிலை—இவ்வாக்கியத்தில் எழுவாயும், பயனிலையும் வந்தன செயப்படுபொருள் இல்லை.

3. பாடத்தைப் படி—இதில் நீ தோன்றா எழுவாய். படி-பயனிலை. பாடத்தை-செயப்படுபொருள்.

பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் எவை?

1. ராமன் காட்டுக்குப் போனான்.
2. கண்ணா! பள்ளிக்கூடம் போ; பாடம் படி.
3. நீ வருவாயா?
4. இது மிகவும் நல்ல மாடு.
5. மலர்களில் இருக்கும் தேனை வண்டுகள் குடிக்கும்.
6. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
7. ஒழுக்கம் உயர்வு தரும்.

8. தரும சிந்தை உள்ளவன் நல்ல காரியம் செய்வான்.
9. நல்ல மாணுக்கன் பள்ளிக்கு ஒழுங்காகப் போவான்.
10. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.

நிறுத்தல் குறிகள்

78. நாம் பேசும் போது பெரிய வாக்கியங்களை இடையிடையே நிறுத்தாமல் ஒரே மூச்சாகப் பேசுவதில்லை. அர்த்தம் நன்ருகத் தெரியும் பொருட்டுச் சில இடங்களில் நிறுத்திப் பேசுகின்ரும். எழுதும் போது இவ்வாறு நிறுத்தும் இடங்களில் புள்ளிகளை அடையாளங்களாக உபயோகிப்பது உண்டு. அவ்வடையாளக்குறிகள் நிறுத்தல் **குறிகள்** என்று வழங்கப்படும்.

நிறுத்தல் குறிகள் கால்புள்ளி, அரைப்புள்ளி, முக்கால்புள்ளி, முற்றுப்புள்ளி, விஞக்குறி, வியப்புக்குறி என்பவையாம்.

கால் புள்ளி (,) இது ஆங்கிலத்தில் "காமா" என்று வழங்கப்படும். இங்கே ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(மாத்திரை என்பது கண் இமைத்தல் கை நொடித்தல் ஆகிய இவற்றிற்குவேண்டிய கால அளவு)

அரைப் புள்ளி (;) இது ஆங்கிலத்தில் "ஸெமி கோலன்" என்று வழங்கப்படும். இங்கே இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

முக்கால் புள்ளி (:) இது ஆங்கிலத்தில் "கோலன்" என்று வழங்கப்படும். இங்கே மூன்று மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

முற்றுப் புள்ளி (.) இது ஆங்கிலத்தில் "புல் ஸ்டாப்" என்று வழங்கப்படும். இங்கே நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும். (ஒவ்வொரு வாக்கியத்தின் இறுதியிலும் முற்றுப் புள்ளி இருக்க வேண்டும்.)

விஞக்குறி (?) இது ஆங்கிலத்தில் "இன்டராகேஷன் மார்க்" என்று வழங்கப்படும். இங்கே நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

வியப்புக்குறி (!) இது ஆங்கிலத்தில் 'எக்ஸ்கிளமேஷன் மார்க்" என்று வழங்கப்படும். இங்கே நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். (வியப்புக்குறி ஆச்சரியமான விஷயத்தைக் குறிக்கும் போது வரவேண்டும்.)

பயிற்சி

(,) அன்பும், அருளும், அறிவும், ஈகையும் மக்கட்குச் சிறந்த குணங்கள்.

(;) சுத்தமான நீரைக் குடிக்க வேண்டும்; சுத்தமான காற்றைச் சுவாசிக்க வேண்டும்; வீட்டில் போதிய வெளிச்சம் இருக்க வேண்டும்; இவை உடல் நலத்திற்கு முக்கிய சாதனங்களாம்.

(:) பூதம் ஐந்து: நிலம், நீர், தீ, காற்று, வெளி.

(.) பறவைகள் ஆகாயத்தில் பறந்தன.

(?) புத்தகம் எங்கே வைத்தாய்?

(!) ஆஹா! கடவுள் படைப்பின் அற்புதமே அற்புதம்!

புணரியல்

79. சொற்கள் ஒன்ருேடொன்று சேருவது புணர்ச்சி அல்லது சந்தி எனப்படும்; அங்ஙனம் சொற்கள் சேரும்போது முதலில் நிற்பது நிலைமொழி என்றும், அதனோடு வந்து சேருவது வருமொழி என்றும் வழங்கப்படும்.

ராமன் வந்தான்—இதில் முதலில் நிற்கும் சொல்லாகிய 'ராமன்' என்பது நிலைமொழி; அதனுடன் வந்து சேரும் சொல்லாகிய 'வந்தான்' என்பது வருமொழி.

80. புணர்ச்சி: இயல்பு புணர்ச்சி விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.

81. 'பெரிய மனிதன்', 'மரம் வளர்ந்தது'— இவற்றில் நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் எவ்வித மாறுதலும் இன்றி இயல்பாகப் புணர்ந்திருக்கின்றன. ஆதலால்,

இயல்பு புணர்ச்சி என்பது எவ்வித மாறுதலும் இன்றி நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் சேருவதாம்.

(உ - ம்) பறவை பறந்தது.

அறம் வளர்த்தாள்.

82. 'இந்தப் புத்தகம்'—இதில் இந்த என்னும் நிலைமொழி ஈறும், புத்தகம் என்னும் வருமொழி முதலும் சேரும்போது ப் என்னும் வேறு எழுத்து அதிகமாகத் தோன்றியிருக்கிறது. "கற்பலகை"—இதில் கல் என்னும் நிலைமொழி ஈறும் பலகை என்னும் வருமொழி முதலும் சேரும்போது நிலைமொழி ஈறாகிய ல் என்பது ற் என்னும் எழுத்தாகத் திரிந்து நிற்கிறது.

மர வேர்—இதில் மரம் என்னும் நிலைமொழி ஈறும், வேர் என்னும் வருமொழி முதலும் சேரும்போது நிலைமொழி ஈறாகிய ம் என்னும் எழுத்துக் கெட்டு நிற்கிறது. ஆதலால்,

விகாரப் புணர்ச்சி என்பது தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய மாறுதலுடன் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் சேருவதாம். (விகாரம்-மாறுதல்)

(உ - ம்) 1. மா + காய் = மாங்காய்
வாழை + பழம் = வாழைப்பழம் } தோன்றல் விகாரம்

2. கல் + பலகை = கற்பலகை
பொன் + குடம் = பொற்குடம் } திரிதல் விகாரம்

3. நிலம் + வலயம் = நிலவலயம்—கெடுதல்விகாரம்

உயிர்முன் உயிர்

83. நிலைமொழி ஈற்றில் நிற்கும் இ, ஈ, ஐ என்னும் உயிர் எழுத்துக்களின் முன் வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் இடையில் 'ய்' என்னும் மெய்யெழுத்துத் தோன்றும்.

(உ - ம்) மணி+அழகு=மணியழகு
நீ+இருந்தாய்=நீயிருந்தாய்
குழந்தை+அழுதது=குழந்தையழுதது

84. நிலைமொழி ஈற்றில் நிற்கும் அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் எழுத்துக்களின் முன் வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் இடையில் 'வ்' என்னும் மெய்யெழுத்துத் தோன்றும்.

(உ - ம்) மிக+அழுதான்=மிகவழுதான்
ஆ+எங்கே=ஆவெங்கே
திரு+அருள்= திருவருள்
பூ+அழகு=பூவழகு
கோ+இல்=கோவில்

85. ஏ என்னும் எழுத்தின் முன் வருமொழி முதலில் உயிர் வந்தால் சில இடங்களில் 'ய்' என்னும் எழுத்தும், சில இடங்களில் 'வ்' என்னும் எழுத்தும் தோன்றும்.

(உ - ம்) மகனே + அல்லன் = மகனேயல்லன்
சே + எறினன் = சேவேறினன்

குறிப்பு:— மேற்காட்டியவாறு இடையில் தோன்றும் ய், வ் என்னும் எழுத்துக்களுக்கு உடம்படுமெய் என்று பெயர்.

உயிர்முன் மெய்

86. நிலைமொழியின் ஈற்றில் நின்ற உயிர் களின் முன் க, ச, த, ப என்னும் வல்லின மெய் கள் வந்தால் பெரும்பாலும் மிகும்.

(உ - ம்) கீரை + கறி = கீரைக்கறி
ஆட + சென்றான் = ஆடச்சென்றான்
புலி + தோல் — புலித்தோல்
மர(ம்) + பலகை = மரப்பலகை

குறிப்பு:—வந்தபிள்ளை, வந்தன குதிரைகள், பல பெண்கள்— இவ்வாறு உயிர்முன் வல்லெழுத்துக்கள் மிகாமல் வருதலும் உண்டு.

87. அந்த, இந்த, எந்த என்னும் சொற் களுக்கு முன் வருமொழி முதலில் வரும் வல்லின மெய்கள் மிகுந்தே வரும்:

(உ - ம்) இந்த + காடு = இந்தக்காடு
அந்த + பானை = அந்தப்பானை
எந்த + தட்டு = எச்சந்தட்டு

மெய்ம் முன் உயிர்

88. நிலைமொழி ஈற்றிலுள்ள மெய்யெழுத் தின் முன் வருமொழி முதலில் உயிர் வந்தால் அந்த உயிரானது மெய்யெழுத்தோடு கூடும்.

(உ - ம்) பால்+இனிது=பாலினிது
காய்+இல்லை=காயில்லை
மலர்+அழகு=மலரழகு

89. தனிக் குற்றெழுத்தின் முன் நின்ற மெய்யெழுத்து, வருமொழி முதலில் உயிர் வந்தால் அம் மெய் இரட்டிக்கும்.

(உ - ம்) மண்+அருமை=மண்ணருமை
கல்+எறிந்தான்=கல்லெறிந்தான்

மெய்ம் முன் மெய்

90. நிலை மொழி ஈற்றிலுள்ள ம் என்னும் மெய் க, ச த ஆகிய வல்லினம் வரின் முறையே ங், ஞ், ந் என்னும் மெய்களாகத் திரியும்.

(உ - ம்) வரம்+கொடுத்தான்=வரங்கொடுத்தான்.
அறம்+செய்தான்=அறஞ்செய்தான்
பழம்+தந்தான்=பழந்தந்தான்